**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**
**அ.வ.எண்.12/2020**

தேதி . 30.11.2021

பெயர் . துளசி

க/பெ . முரளி

வயது . 27

வா.சா. 1

**குறுக்கு விசாரணை**

வழக்கு சொத்து காலிமனை என்றால் சரிதான். எனக்கு விற்பனை செய்தவர் முனியம்மாள், ரோசம்மாள், மணியம்மாள் என்றால் சரிதான். குப்பையா செட்டி மனைவி முனியம்மாள், மகள்கள் ரோசம்மாள், மணியம்மாள் என்றால் சரிதான். வழக்கு சொத்து வாங்கும் போது வில்லங்கம் பார்த்தேனா என்றால் பார்த்தேன். 2ம் பிரதிவாதியின் பெயர் வில்லங்கத்தில் இருந்தது தெரியுமா என்றால் தெரியாது. குப்பையா செட்டி சொந்தமாக வீடு உள்ளது அதில் ரோசம்மாள் குடியிருக்கிறார் என்றால் சரிதான். வழக்கு சொத்து பிரதிவாதிக்கு தான் சொந்தம் அவர்கள் தான் அனுபவித்தில் இருந்தது என்றால் இல்லை. வா.த.சா.ஆ.1 ன் படி சக்குபந்தியில் கிழக்கு பக்கம் வெங்கடேசன் வீடு மற்றும் காலிமனை, மேற்கு ரோசம்மாள் வீடு, காலிமனை என்று உள்ளது அது தவறாக சக்குபந்தி பிரதிவாதியை மோசடி செய்து எழுதிய பத்திரம் என்றால் இல்லை. பதிலுரையில் உள்ள விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். வழக்கறிஞர் ஆணையர், சர்வேயர் ஆணையர் வைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். என் பெயரில் உள்ள பட்டா வா.த.சா.ஆ.2ன் படி முறைப்படி அளந்து கொடுக்கவில்லை எனவே செல்லாது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.2ல் உள்ள சர்வே எண் 125/47பி வழக்கு சொத்திற்கு உண்டான சர்வே எண் இல்லை என்றால் தவறு. பிரதிவாதிகள் பட்டன் காலத்திலிருந்து வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் இல்லை. குப்பையா செட்டி பெயரில் உள்ள பட்டா இந்த வழக்கிற்கு பொறுந்தது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை அளந்து பார்க்கவில்லை என்றால் அளந்து பார்த்தோம். அளக்கப்பட்ட சாலனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ.2ன் மீது மேல்முறையிடு நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது**.